# TAMIL NADU
# GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.1] CHENNAI WEDNESDAY, WEDNESDAY 4,2012**
**Margazhi 19, Thiruvalluvar Aandu-2042**


## Part VI --- Section 2
(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**( அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ / மி.வி (SC) / 7–29, 16–12–2011 நாளிட்டது )**

( ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம் )

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பினைக் குறித்துரைத்து அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும், மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் குத்தகைதாரராகவுள்ளவரும், வளாகத்தின் உரிமையாளரிடமிருந்து இசைவுக்கடிதம் பெற்று தாக்கல் செய்யப்படமுடியாதிருக்கிறவருமான நுகர்வோரிடமிருந்தும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளதுமான, செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள பட்டியல் பொறுத்து, எந்தவிதமான பொறுப்பும் எடுத்துக் கொள்ளாதிருக்கிற வளாகத்தின் உரிமையாளரிடமிருந்தும் நிலுவைத்தொகை மற்றும் பிற பல்வகையான கட்டணங்கள் வசூலித்தல் தொடர்பாக, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட்டிற்கு ஒருசில இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்பதாலும்,

மற்றும் மின் வழங்கல் விதித்தொகுப்பின் வகைமுறைகளின்படி மாதாந்திர மற்றும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை மின்கட்டணம் வசூலிக்கப்படும் மின்னிணைப்புகள் பொறுத்தவரை, கூடுதல் பிணை வைப்புத் தொகை ஏப்ரலுக்கு முன்சென்ற பன்னிரெண்டு மாதங்களுக்கான மின்கட்டணங்களின் மாதாந்திர சராசரியின் இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு கட்டணங்கள் வசூலிக்கும் தற்போதைய நடைமுறையானது, நிலுவைத்தொகையை வசூலிப்பதற்கு போதுமானதாக இல்லாதிருக்கிறது என்பதாலும்,

மற்றும் மேலேயுள்ள மாற்றத்தைச் செயற்படுத்துவதற்காக தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளில் கூடுதல் கூறினைப் புகுத்துவது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அவ்வாறு புகுத்துதல் முந்தைய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்பின்பு, இதில் *"முதன்மை விதித்தொகுப்பு"* என்று குறிப்பிடப்படும் தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறைவிதியின் (5)ஆம் கூறில் பின்வரும் (vii)ஆம் உட்கூறினை இதன் மூலம் புகுத்தியுள்ளது :–

**2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு**

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

அ) இந்த விதித்தொகுப்பு, 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (ஏழாம் திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்படும்.

ஆ) இது, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. **5ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதியில், 5ஆம் ஒழுங்குமுறைவிதியின்(5)ஆம் கூறின் முடிவில் பின்வரும் (vii)ஆம் உட்கூறு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

*" (vii) (அ) வளாகத்தின் உரிமையாளர்களாக இராத மற்றும் மின் வழங்கலைப் பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளரிடமிருந்து மின்பகிர்மான விதித்தொகுப்பின் IIIஆம் பின்னிணைப்பின் 5ஆம் படிவத்திலுள்ள இசைவுக் கடிதத்தினை பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிற மாதாந்திர பட்டியலிடப்படும் மின்நுகர்வோருக்கு பிணைய வைப்புத் தொகையானது, ஏப்ரலுக்கு முன்சென்ற பன்னிரெண்டு மாதங்களுக்கான மின்சாரக் கட்டணங்கள் மாதாந்திர சராசரியின் நான்கு மடங்கிற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்.*

*(ஆ) வளாகத்தின் உரிமையாளராக இராத மற்றும் மின்வழங்கலைப் பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளரிடமிருந்து மின்பகிர்மான விதித்தொகுப்பின் IIIஆம் பின்னிணைப்பின் 5ஆம் படிவத்திலுள்ள இசைவுக் கடிதத்தினை பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிற, இரண்டு மாதத்திற்கு ஒருமுறை பட்டியலிடப்படும் மின் நுகர்வோருக்கு பிணைய வைப்புத்தொகையானது, ஏப்ரலுக்கு முன் சென்ற பன்னிரெண்டு மாதாந்திர சராசரியின் ஆறு மடங்கிற்குச் சமமானதாக இருத்தல் வேண்டும், மற்றும்*

*(இ) மேலேயுள்ள (அ), (ஆ) ஆகியவற்றிலுள்ள வகைமுறைகள், பிணை வைப்புத்தொகை குறித்து மறுஆய்வு செய்யப்படும்போது, தற்போதுள்ள மின்னிணைப்புகளுக்குப் பொருந்தக்கூடியதாகும். விண்ணப்பதாரர் வளாகத்தின் உரிமையாளராக இராதவிடத்தும் மற்றும் மின் வழங்கலைப் பயன்படுத்தும் வளாகத்தின் உரிமையாளரிடமிருந்து மின்பகிர்மான விதித்தொகுப்பின் IIIஆம் பின்னிணைப்பின் 5ஆம் படிவத்திலுள்ள இசைவுக்கடிதத்தைப் பெற்று தாக்கல் செய்ய முடியாதிருக்கிறவிடத்தும், புதிய மின்னிணைப்புகளைச் செயற்படுத்துவது பொறுத்து, பிணை வைப்புத் தொகை வசூலித்தல், அவ்வப்போது திருத்தம் செய்யப்படும் ஆணையத்தின் பல்வகைக் கட்டணங்கள் தொடர்பான மின்கட்டணமல்லாத கட்டணங்கள் மீதான ஆணைகளின் மூலமாகவும் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் 27(4) ஒழுங்குமுறைவிதியின் மூலமாகவும் முறைப்படுத்தப்படும். அத்தகைய புதிய மின்நுகர்வோருக்கு, மேலேயுள்ள (அ) அல்லது, நேர்வுக்கேற்ப, (ஆ)வின்படி போதுமான பிணைவைப்புத் தொகை திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். ’’*

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**சி. குணசேகரன்**
செயலாளர்